**<u>சுருக்கம்</u>**

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – தமிழ்நாடு ஊரக வளர்ச்சிப் பணி – உதவிப் பொறியாளர் நிலையில் தகுதி வாய்ந்த அலுவலர்களைத் தேர்ந்தெடுத்து 2009–10ம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடுதல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை

அரசாணை (ப) எண்.378 நாள் 23.6.2009.

படிக்கப்பட்டவை

1. அரசாணை (ப) எண்.231, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை, நாள் 29.4.2009.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண்.23132/2009/இஇ1, நாள் 8.6.2009 மற்றும் 15.6.2009.

-----

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2009–10ஆம் ஆண்டிற்கு உதவி செயற்பொறியாளர் பதவிக்கு காலிப் பணியிட மதிப்பீடு 60 என்று நிர்ணயிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் 2009–10ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பணியிடத்திற்கான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடும் பொருட்டு 121 உதவிப் பொறியாளர்களின் பெயர்கள் அடங்கிய முன்மொழிவினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ளார்

3. தற்பொழுது இளநிலைப் பொறியாளர்களாகப் பணியாற்றுபவர்கள் 28.6.2004 முதல் இப்பதவியில் பணியாற்றுகிறார்கள். இவர்கள் 5 ஆண்டு பணித்தகுதியை 27.6.2009 அன்று நிறைவு செய்கிறார்கள். முதுநிலை வரைதொழில் அலுவலர்களைப் பொறுத்தவரை இப்பணியிடங்கள் காலியாக உள்ளன. எனவே தீர்வுக்குரிய நாளான (crucial date) 1.3.09 அன்று இளநிலைப் பொறியாளர்கள் மற்றும் முதுநிலை வரைதொழில் அலுவலர் நிலையில் உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு அளிக்கப்படுவதற்கு தகுதியுடையவர்கள் யாரும் இல்லை.

4. மேலே இரண்டில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் 15.6.09 நாளிட்ட கடிதத்தில், 2009–10ஆம் ஆண்டு உதவி செயற்பொறியாளர்கள் பெயர்ப் பட்டியலில் சேர்ப்பதற்கு பரிசீலனைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட திருவாளர்கள். ஆர்.மதியழகன், எஸ்.கே.உதயகுமார், ஏ.தங்கவேலு மற்றும் ஆர்.சாந்தாராம் ஆகிய 4 உதவிப் பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்களாக பதவி நியமனம் பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள 5 ஆண்டு பணித்தகுதியைப் பெறவில்லை என்று தெரிவித்துள்ளார். இவர்கள் பணிப்பார்வையாளர்களாக இருந்தபோது இவர்கள் மீது 17 (பி)ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் நிலுவையில் இருந்த காரணத்தால் இவர்கள் 1999–2000ஆம் ஆண்டுக்கான உதவிப் பொறியாளர் (ஊவ) தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. பின்னர் இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் கைவிடப்பட்டன. எனவே தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெற்று இவர்களது பெயர்கள் 1999–2000ஆம் ஆண்டுக்கான உதவிப் பொறியாளர் (ஊவ) தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் உரிய இடத்தில் சேர்க்கப்பட்டன. பின்னர் இவர்கள் உதவிப் பொறியாளர்களாக (ஊவ) பதவி உயர்வு அளிக்கப்பட்டனர். மேற்காண் 4 நபர்களின் முதுநிலை, உதவிப் பொறியாளர் (ஊவ) பணி நிலையில் மீண்டும் அளிக்கப்பட்டுள்ளதாலும், அவர்களுடைய இளையோர்களின் பெயர்கள் 2009–10ஆம் ஆண்டுக்கான உதவி செயற்பொறியாளர்களின் (ஊவ) பெயர்ப் பட்டியலில் பரிசீலனைக்காக

எடுத்துக்கொள்ளப்பட்டதாலும், இவர்களின் பொருட்டு தமிழ்நாடு ஊரக வளர்ச்சிப் பணியில் உதவி செயற்பொறியாளர் பணியிடத்திற்கான விதி 4ஐ (உதவிப் பொறியாளராக ஐந்தாண்டு காலத்திற்குக் குறையாமல் பணியாற்றியிருக்க வேண்டும்) தளர்த்தி ஆணையிடலாம் என அரசு முடிவு செய்துள்ளது.

**5.** அவ்வாறே **1997**ம் ஆண்டு தமிழ்நாடு பணிகள் நடைமுறை நூலின் முதல் தொகுதியில் பகுதி இரண்டில் உள்ள தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி **48**ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி மேலே பத்தி 4ல் குறிப்பிட்டுள்ள 4 உதவிப் பொறியாளர்களின் பொருட்டு, உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கு, உதவிப் பொறியாளராக ஐந்தாண்டு காலத்திற்குக் குறையாமல் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற பணித்தகுதி தொடர்பான தமிழ்நாடு ஊரக வளர்ச்சிப் பணியின் தற்காலிக பணி விதிகளில் உதவி செயற்பொறியாளர்களுக்கான விதி 4ஐ தளர்த்தி தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் ஆணையிடப்படுகிறது.

**6.** மேலும், மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின் பொது விதிகளில், விதி 4ன் கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையினை அரசு ஆய்வு செய்து **2009–10**ம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் மதிப்பீடு நிர்ணயிக்கப்பட்ட **60** உதவி செயற்பொறியாளர் பணியிடங்களுக்கு பதவி உயர்வு அளிக்கும் பொருட்டு கீழ்க்காணும் நீதிப்பேராணைகளின் இறுதி தீர்ப்புகளுக்குட்பட்டு இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள **60** உதவிப் பொறியாளர்களின் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலினை அரசு வெளியிடுகிறது.

i. Writ Petition No.654/2007
ii. M.P.No.3/08 in W.P.(MD) No.3718/08

இவ்வாணையின் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள **60** நபர்களை உதவி செயற்பொறியாளர் பணியிடத்தில் காலியாக உள்ள பணியிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டு தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலின் அடிப்படையில் வரிசைக்கிரமமாக உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு அளித்து அரசு ஆணையிடுகிறது. உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்ட உதவிப் பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர் பணியிடத்தில் காலிப் பணியிடங்கள் இல்லாத நிலையில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி உதவிப் பொறியாளர்களாக பதவி இறக்கம் செய்யப்படுவார்கள் என்றும் இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
சம்மந்தப்பட்ட அலுவலர்கள் (வழி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
சம்பளம் மற்றும் கணக்குகள் துறை இயக்குநர், சென்னை–15
சம்மந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்
மாநில கணக்காயர், சென்னை–18 (கணக்கு / தணிக்கை)
<u>நகல்</u>
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9
முதன்மைச் செயலரின் தனிச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

பிற்சேர்க்கை

2009–10ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பதவிக்கான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல்

| வ.எண் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பணி மூப்பு பட்டியல் எண் | தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய பணி மூப்பு பட்டியல் எண் | உதவிப் பொறியாளர்களின் பெயர்கள் திருவாளர்கள் / திருமதி |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 160 | 200A37 | ட்டி.மாணிக்கவாசகன் |
| 2 | 179 | 200A62 | எஸ்.ஜெஹான் ஆரா |
| 3 | 184 | 200A70 | அ.நபியத்துல் முசிரியாள் |
| 4 | 186 | –– | எம்.அழகேசன் |
| 5 | 205 | 18 | ஆர்.சக்ரவர்த்தி |
| 6 | 207 | 20 | ஏ.நாகையா |
| 7 | 208 | 21 | வி.மணவாளன் |
| 8 | 212 | 27 | எஸ்.கணேசன் |
| 9 | 214 | 29 | எஸ்.ஆர்பார்ட் ராஜ் |
| 10 | 215 | 30 | ப்பி.நல்லியப்பன் |
| 11 | 216 | 31 | ப்பி.ராஜகோபால் |
| 12 | 217 | 32 | எஸ்.நயினார் |
| 13 | 218 | 33 | கே.தனபால் |
| 14 | 219 | 34 | ஆர்.மதியழகன் |
| 15 | 220 | 35 | ஜே.தேசிங்குராஜன் |
| 16 | 221 | 36 | என்.அறிவழகன் |
| 17 | 223 | 38 | ஆர்.முருகேசன் |
| 18 | 224 | 39 | டி.செல்வகுமரன் |
| 19 | 225 | 40 | வி.கே.மதியழகன் |
| 20 | 226 | 41 | எஸ்.ராமசாமி |
| 21 | 228 | 43 | கே.சுப்பையா |
| 22 | 229 | 44 | என்.ஞானசேகர் |
| 23 | 230 | 45 | ஓ.எம்.சாகுல் ஹமீத் |
| 24 | 231 | 46 | ஆர்.முருகேசன் |
| 25 | 232 | 47 | எம்.எஸ்.அப்துல் ரசாக் |
| 26 | 233 | 48 | எஸ்.கே.உதயகுமார் |
| 27 | 236 | 51 | ஆர்.முத்துகிருஷ்ணன் |
| 28 | 237 | 52 | ஏ.ராதாகிருஷ்ணன் |
| 29 | 238 | 53 | ஏ.வி.சுந்தரராஜன் |
| 30 | 239 | 54 | ஜி.என்.கோவிந்தராஜ் |
| 31 | 240 | 55 | ட்டி.நானிலதாசன் |
| 32 | 242 | 58 | ஏ.ராஜன் |
| 33 | 244 | 60 | ஆர்.சேகர் |
| 34 | 245 | 61 | ப்பி.ராஜேந்திரன் |
| 35 | 246 | 62 | ஏ.கருணாநிதி |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 36 | 248 | 64 | வி.தங்கவேலு |
| 37 | 249 | 65 | கே.செங்கோடன் |
| 38 | 250 | 66 | எம்.சோமசுந்தரம் |
| 39 | 251 | 67 | ஆர்.சாந்தாராம் |
| 40 | 253 | 69 | ஜி.சீனிவாசன் |
| 41 | 255 | 71 | என்.ரெங்கராஜு |
| 42 | 256 | 72 | இ.கணேசன் |
| 43 | 257 | 73 | ஏ.ஹமீத் முஸ்தபா |
| 44 | 258 | 74 | ஆர்.முத்துக்குமார் |
| 45 | 259 | 75 | ஐ.ராஜசேகர் |
| 46 | 260 | 76 | டி.கொழுந்தசாமி |
| 47 | 261 | 77 | கே.பெருமாள் கவுண்டன் |
| 48 | 264 | 80 | கே.சம்பத் |
| 49 | 265 | 81 | ப்பி.மணிவாசகம் |
| 50 | 266 | 82 | ஏ.திருநாவுக்கரசு |
| 51 | 267 | 83 | ப்பி.சண்முகம் |
| 52 | 268 | 84 | என்.மனோகரன் |
| 53 | 269 | 85 | என்.ஆர்.செல்லபாண்டியன் |
| 54 | 271 | 88 | ப்பி.அருணாச்சலம் |
| 55 | 274 | 91 | எஸ்.லாரன்ஸ் அன்புநாதன் |
| 56 | 275 | 92 | ப்பி.அசோகன் |
| 57 | 277 | 95 | ஜி.திருநாராயணன் |
| 58 | 278 | 96 | எஸ்.பிரபாகர் |
| 59 | 279 | 97 | கே.மனோகரன் |
| 60 | 280 | 98 | சி.முனியப்பன் |

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.